விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

## Valampurii

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 தை 28 ஞாயிற்றுக்கிழமை (11.02.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 54

### சர்வகட்சிக் குழுக்கூட்டம் அடுத்த வாரம் நடைபெறும்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் யோசனைகளினை முன்வைக்கும் நோக்கில் அமைக்கப்பட்ட சர்வகட்சிகள் குழு அடுத்த வாரம் கூடவுள்ளது.

நாட்டின் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் தாம் (04 ஆம் பக்கம் பார்க்க)

### பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் அவசரமாக இந்தியாவிற்கு விஜயம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இந்தியாவிற்கு அவசர விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். இந்திய மத்திய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் அங்கு சென்றுள்ள கோத்தபாய ராஜபக்ஷவை இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி சந்தித்து பேசியுள்ளார்.

இச் சந்திப்பின்போது இலங்கையில் இடம் பெற்றுவரும் தாக்குதல்கள் குறித்து இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் தமது கடுமையான விசனத்தை வெளிப்படுத்தியதாகவும் இவ்வாறான (04 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியாவில் ஆசிரியர் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியா மன்னார் வீதியில் உள்ள வேப்பங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஆசிரியர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். வேப்பங்குளத்தைச் சேர்ந்த இவரது வீட்டுக்கு 7.45 மணிக்கு சென்ற இனந்தெரியாத நபர்கள் அவரை (04 ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சுப் பதவிகள் பறிக்கப்பட்டமைக்கு சுதந்திரக்கட்சியின் செயற்குழு அங்கீகாரம்

## ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர்களான அநுரா பண்டாரநாயக்க,மங்கள சமரவீர ,சிறிபதி சூரியாராட்சி ஆகியோரின் அமைச்சுப் பதவிகள் ஜனாதிபதியால் பறிக்கப்பட்டமை சரியானது என சிறிலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயற்குழுக்கூட்டம் நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட கட்சிகளின் அங்கத்தவர்கள் ஜனாதிபதியின் முடிபு சரியானது எனத் தெரிவித்ததுடன் அதற்கு ஆதரவும் தெரிவித்துள்ளனர். (04 ஆம் பக்கம் பார்க்க)



### ஐக்கிய நாடுகள் செயற்குழு கூட்டத்தில் சிறுவர் சேர்ப்பு குறித்து விவாதம்

(கொழும்பு)

சிறுவர்களை படையில் சேர்ப்பதற்கு எதிரான அக்கறையை வெளிப்படுத்தாமை தொடர்பாக புலிகள் மீதான நடவடிக்கையை கருத்தில் கொள்ளுமாறு ஐக்கிய நாடுகள் சிறுவர் மற்றும் ஆயுத முரண்பாடு தொடர்பாக செயற்குழு கோரியுள்ளது.

சிறுவர் மற்றும் ஆயுத முரண்பாடுகள் செயற்குழுவின் செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி ராதிகா குமாரசுவாமி மற்றும் ஆலோசகர் அலன் றொக் நியுயோர்க்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து ஆராய்ந்து தீர்மானம் எடுக்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. அத்துடன் விடுதலைப்புலிகள் தவறு இழைப்பவர்களாக ஐக்கிய நாடுகள் சபையின் கருத்தினை வரவேற்பதாக இலங்கைக்கான தூதுவர் காரியவசம் தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கையர்களுடன் சென்ற பயணிகள் கப்பல் விபத்தானது

(கொழும்பு)

பிரான்ஸின் கஜானாவிலிருந்து இஸ்பெயின் கரைரோஸ் தீவை நோக்கி பயணத்தை மேற்கொண்ட பயணிகள் கப்பல் மொறட்டோனியாவுக்கு அருகில் விபத்துக்குள்ளானது. சுமார் 400க்கும் அதிகமானவர்களை ஏற்றிச் சென்ற அக் கப்பலில் இலங்கையர்கள் அதிகம் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக குடியேறுவோரை ஏற்றிச் சென்ற கப்பலே விபத்துக்குள்ளானதாக கூறப்பட்டது. ஆபிரிக்க பிராந்தியம் ஊடாக அக் கப்பல் பயணத்தை ஆரம்பித்த போதிலும் அக்கப்பலில் ஆபிரிக்கர்கள் எவரும் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கப்பலில் 300க்கும் அதிகமானவர்கள் காஷ்மீர் வாசிகள் என்றும் ஏனையவர்களுள் இலங்கையர்களும் அடங்குவதாக கூறப்படுகிறது.

இரண்டு மாதங்களுக்கு மேலாக கப்பலில் பயணித்ததாக (04 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வை மேற்கொள்வதற்கு விடுதலைப்புலிகளுடன் பேசவேண்டும்

### தற்போது நல்ல சந்தர்ப்பம் என்கிறது அமெரிக்கா

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட்டால் மாத்திரமே வெளிநாடுகள் வழங்கும் உதவிகள் மூலம் பயன்கள் ஏற்படுமென இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓபிளக் தெரிவித்துள்ளார்.

இந்த பிரச்சினை நிரந்தரமாக தீர்க்கப்படாமல் வழங்கப்படும் உதவிகளினால் பயன் ஏதும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போதைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசியல் தீர்வைமேற்கொள்ள விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதே சிறந்தது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இலங்கையின் பிரச்சினை காரணமாக பாதுகாப்பு செலவீனங்கள் அதிகரித்துள்ளன. இதனைவிட உள்நாட்டு இடப்பெயர்வுகளினால் ஏற்படும் (04 ஆம் பக்கம் பார்க்க)

### ஊரடங்கு நேரம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பிறப்பிக்கப்படும் ஊரடங்கு நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளது. மாலை 6 மணி முதல் அதிகாலை 4 மணிவரை பிறப்பிக்கப்படுவதாக இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன. இதுவரை காலமும் 7 மணிமுதல் அதிகாலை 4 மணிவரையும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

### மங்கள-சந்திரிகா இங்கிலாந்தில் சந்திப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை சந்திப்பதற்காக மங்கள சமரவீர இங்கிலாந்துக்கு விஜயம் செய்யவுள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச் சந்திப்பில் அரசில் நகர்வுகள் குறித்து கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

### மூன்று அமைச்சுப் பொறுப்புக்களையும் ஜனாதிபதி மகிந்த பொறுப்பேற்றார்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர்களான மங்கள சமரவீர,அநுர பண்டாரநாயக்க மற்றும் சிறிபதி சூரியாராட்சி ஆகிய மூவரினதும் அமைச்சுப் பொறுப்புக்களை ஜனாதிபதி பொறுப்பேற்றார்.

இந்த மூன்று அமைச்சர்களினதும் அமைச்சுப் பொறுப்புக்கள் உடனடியாக நடை முறைக்கு வரும் வகையில் அரசியல் யாப்பின் 47 ஆவது சரத்தின் பிரகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று (04 ஆம் பக்கம் பார்க்க)

### ஏழு தமிழர்கள் கைது

(கொழும்பு)

உடப்பு செல்வபுரம் பகுதியில் இராணுவத் தினரும் பொலிஸாரும் இணைந்து நடத்திய தேடுதலில் ஏழு தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை 4 மணி முதல் காலை 8.30 மணிவரை இடம் பெற்ற தேடுதல் நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட இவர்கள் முந்தல் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் (04 ஆம் பக்கம் பார்க்க)

# 15 வயதிற்கு மேற்பட்ட மாணவர்கள் மரதன் ஓட்டப் போட்டிக்கு அனுமதி

பாடசாலை மட்டங்களில் மரதன் ஓட்டப் போட்டிகள் நடத்தப்படும் போது மாணவ வீரர்களின் உடற்தகைமைகள் உறுதி செய்யப்பட வேண்டும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

குறிப்பாக மரதன் ஓட்டப் போட்டிக்கு முன்னதாக மாணவர்களின் உடற்தகைமைகள் மருத்துவ பரிசோதனைகள் மூலம் உறுதி செய்ய வேண்டுமென சகல பாடசாலைகளுக்கும் கல்வியமைச்சுப் பணிப்புரை வழங்கியுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கையை கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லை நடராஜா ஏற்பாட்டில் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

அண்மையில் தென்பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றின் இல்ல விளையாட்டுப் போட்டிக்கு முன்னோடியாக நடத்தப்பட்ட மரதன் ஓட்டப் போட்டி நிறைவில் மாணவர் ஒருவர் உயிரிழந்ததையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உடற்தகுதியற்ற மற்றும் பயிற்றப்படாத மாணவர்களை மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்றச் செய்வதனால் உயிர் ஆபத்து ஏற்படுவதாக கல்வி அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் 15 வயதிற்கு மேற்பட்ட மாணவர்கள் மாத்திரமே மரதன் ஓட்டப் போட்டிக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என் கல்வியமைச்சுக் கேட்டுக் கொண்டுள்ளது. (ச-5)

# சிவராத்திரி தினத்தை முன்னிட்டு தேங்காயெண்ணை, கற்பூரம் ஆலயங்களுக்கு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு சகல ஆலயங்களுக்கும் இலவச தேங்காயெண்ணையும் பணத்திற்கு கற்பூரமும் வழங்கப்படவுள்ளது.

நாளை முதல் பலாலி வீதியிலுள்ள இந்து சமயப்பேரவையில் இவை வழங்கப்படவுள்ளன. யாழ்.அரச அதிபர் க.கணேஷினால் வழங்கப்பட்ட கற்பூரமும் முன்னாள் இந்து கலாசார அமைச்சரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தி.மகேஸ்வரனால் வழங்கப்பட்ட தேங்காயெண்ணையுமே நாளை முதல் வழங்கப்படவுள்ளதாக இந்து சமயப் பேரவையினர் தெரிவித்தனர்.

வடமராட்சி ஆலயங்களுக்கான இவ்விநியோகம் தொண்டமானாற்றிலுள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தேங்காயெண்ணை மற்றும் கற்பூரம் பெற வரும்போது கோவில் தர்மகர்த்தா சபையின் கடிதத் தலைப்பில் எழுதிய கடிதத்தில் தலைவர் அல்லது செயலாளர் கையொப்பமிட்டுக் கொண்டு வருமாறும் கடிதத் தலைப்பில்லாதவர்கள் அப்பகுதிக் கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடன் வருமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (ச)

# பாகிஸ்தான்–இலங்கைக்கிடையே வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்து

(கொழும்பு)

பாகிஸ்தான் மற்றும் இலங்கைக்கிடையில் விமான சுற்றுலா மற்றும் உற்பத்தி தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

பாகிஸ்தானிய முதலீட்டுச் சபைச் செயலாளர் டலட் எம்.மியான் மற்றும் இலங்கை முதலீட்டுச் சபைத் தலைவர் பேராசிரியர் லக்ஷ்மன் ஆர்.வட்டவன் ஆகியோர் இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இவ் வைபவத்தில் கைத்தொழில் அபிவிருத்தி முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம கலந்து கொண்டார்.

பாகிஸ்தான் மற்றும் இலங்கை வர்த்தக நடவடிக்கை மற்றும் சுற்றுலாவுக்கான விசா வழங்கும் முறை மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கு இரு தரப்பும் இணங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# அத்தியாவசிய உணவுப் பொருள்களை குறைந்த விலையில் சந்தைப்படுத்தல்

(கொழும்பு)

களஞ்சியசாலைகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ள அத்தியாவசிய உணவுப் பொருள்களை மக்களுக்கு நியாயமான விலையில் விநியோகிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக வர்த்தக சந்தைப்படுத்தல் அபிவிருத்திக் கூட்டுறவு மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இந்த அத்தியாவசிய உணவுப் பொருள்களை எந்த விலையில் சந்தைப்படுத்த முடியும்என்ற விடயம் தொடர்பாக புறக்கோட்டை இறக்குமதி வர்த்தகர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இப் பொருள்களின் விலை மட்டங்கள் அமைச்சுக்குத் தெரியவரும் என அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.கே.ரத்னாநாயக்க தெரிவித்துள்ளார்.

விலைகள் தீர்மானிக்கப்பட்ட பின்னர் களஞ்சியசாலைகளிலிருந்து பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டு அவை லக், சதோச மற்றும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் என்றும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (ச)

# யாழ்ப்பாணத்தில் கடந்த இரு தினங்களில் ஐந்து பேர் கடத்தப்பட்டதாக முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடந்த இரு தினங்களில் ஐந்து பேர் கடத்தப்பட்டும் காணாமல் போயுள்ளதாகவும் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுதுமலையைச் சேர்ந்த ச.ரமணக்குமார் (வயது-28) நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் கடைக்குச் சென்றதாகவும் அதன் பின் வீடு திரும்பவில்லை எனவும் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெள்ளை வானில் வந்த அடையாளம் தெரியாத நபர்களினால் நேற்று முன்தினம் இரவு 12 மணியளவில் நாயன்மார்கட்டைச் சேர்ந்த யோ.கபிலன் (வயது-31) என்பவரை வீட்டில் இருந்தவேளை கடத்திச் சென்றுள்ளதாகவும்,

அதே தினத்தன்று இரவு ஒரு மணியளவில் மாமி வீட்டிலிருந்த சுன்னாகத்தைச் சேர்ந்த அ.விஜயகுமார் (வயது-32) என்பவரும் கடத்தப்பட்டுள்ளனர்.

அன்றையதினம் இரவு 11மணியளவில் அரியாலையைச் சேர்ந்த செ.நிக்சன் (வயது-29) என்பவரை அவரது வீட்டிற்கு வெள்ளை வானில் வந்த நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டதாக உறவினர்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சங்கானை கப்பன்டா முகாமைச் சேர்ந்த ஜோசப் தேவகரன் (வயது-32) என்பவர் நேற்றுக் காலை 9 மணிக்கு சட்டத்தரணியைச் சந்திக்கச் சென்று கொண்டிருந்த போது வெள்ளை வானில் சென்றவர்களினால் கடத்திச் செல்லப்பட்டதாக உறவினர்களால் மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது. (ச-3)

# நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்ட தேசிய கல்வியியலாளர்களுக்கு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பரீட்சார்த்திகள் யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க முடியும் என யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். (து)

# காதலியைத் தேடி கனடா செல்ல முயன்ற இலங்கை இளைஞர் கைது

சென்னையிலிருந்து தனது காதலியைச் சந்திப்பதற்காக போலி விசா மூலம் கனடா செல்ல முயன்ற இலங்கை வாலிபர் ஒருவர் சென்னை விமான நிலையத்தில்வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது;

கொழும்பு நகரைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே கொழும்பில் படிப்பை முடித்து லண்டனில் பணிபுரிந்து வந்துள்ளார். கொழும்பில் படித்துக் கொண்டிருந்தபோது இவர் பெண் ஒருவரைக் காதலித்துள்ளார்.

அவர் லண்டன் சென்று விட்டதால் ஆறு மாதங்களாக கொழும்பில் இருந்த தனது காதலியிடமிருந்து அவருக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

இந்நிலையில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இலங்கைக்குத் திரும்பிய அவ் இளைஞன் தனது காதலியைத் தேடியுள்ளார்.

அப்போது அவரது காதலி தனது படிப்பை முடித்துக் கொண்டு கனடா சென்று விட்டது தெரியவந்தது. எப்படியோ காதலியின் தொலைபேசி இலக்கத்தைப் பெற்றுக் கொண்டு அவருடன்தொடர்பு கொண்ட போது பிரஸ்தாப இளைஞனை கனடா வருமாறு அவர் அழைத்துள்ளார்.

இலங்கையிலிருந்து கனடா செல்ல விசா பெறுவது கடினம் என்பதால் சென்னைக்குச் சென்ற இவ் இளைஞன்அங்கு போலி விசா தயாரித்துக் கொடுக்கும் நபர்களுக்கு இரண்டுலட்சம் பணம் கொடுத்து கனடா செல்வதற்கான போலி விசாவைப் பெற்றுள்ளார்.

இந்நிலையில் கடந்த புதன்கிழமை கனடா செல்வதற்காக சென்னை விமான நிலையத்திற்கு வந்த அவரிடம் வழக்கமான குடியுரிமைச் சோதனை நடத்தப்பட்டது.

அப்போது போலி விசாவில் கனடா செல்லவிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவரின் காதல் கதையும் அதிகாரிகளுக்குத் தெரிய வந்தது. உடனே அவர் விமான நிலையப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ச)

# சட்ட ரீதியற்ற முறையில் இறக்கப்பட்ட வாகனங்கள், உதிரிப்பாகங்கள் மீட்பு

(கொழும்பு)

சட்டரீதியற்ற முறையில் தீர்வையின்றி இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களும் உதிரிப்பாகங்களும் சுங்க அதிகாரிகளினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவற்றின் பெறுமதி 2 கோடி ரூபாவாகும். கன்டெய்னர்களைச் சோதனையிட்ட போதே இவை கண்டுபிடிக்கப்பட்டதுடன் சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு கிராண்ட்பாஸ் மற்றும் ஒறுகொட்டவத்தை ஆகிய பகுதிகளிலுள்ள கிறேலைஸ் கன்டெயினர் களஞ்சியசாலைகளில் சந்தேகத்திற்கிடமான முறையில் ஐந்து கன்டெயினர்கள் சுங்க அதிகாரிகளினால் சோதனைக்குட்படுத்தப்பட்ட போது மேற்படி சட்ட ரீதியற்ற முறையில் தீர்வையின்றி இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களும் உதிரிப்பாகங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

கிராண்ட்பாஸில் உள்ள கிறேலைஸ் கன்டெயினர் களஞ்சியசாலை ஒன்றில் 2 கன்டெயினர்கள் சோதனைக்குட்படுத்தப்பட்ட வேளை அக் கன்டெயினர்களில் 2 சொகுசுக் கார்களும் 2 ரக் வண்டிகளும் உதிரிப்பாகங்களும் மீட்கப்பட்டன. (ச)

# மூதூர் வைத்தியசாலையில் ஆளுநர் தொடர்பாக மாநாடு

மூதூர் வைத்தியசாலையின் அபிவிருத்தித் தொடர்பான விசேட கூட்டம் ஒன்று நேற்று திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் மொகான் வஜேவிக்கிரம தலைமையில் அவரது வதிவிடத்தில் இடம் பெற்றதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த விசேட கூட்டத்தில் அமைச்சர்களான றிசாத் பதியுதீன், நஜீப் ஏ.மஜீத்,மூதூர் பிரதேச சபைத் தலைவர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் மூதூர் மஜ்லிஸ் சூறா அதிகாரிகளும் கலந்துகொண்டிருக்கின்றனர்.

இங்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம் மூதூர் மருத்துவமனைக்கு நான்கு மருத்துவ அதிகாரிகளை நியமிப்பது, ஆறு மாத காலத்திற்குள் ஆறு மருத்துவத் தாதியர்களை நியமனம் செய்வது மேலும் இந்த மருத்துவமனைக்கு மேலதிகமாக அம்புலன்ஸ் வண்டி ஒன்றினைப் பெற்றுக் கொடுப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது மற்றும் விசேட மருத்துவ அதிகாரிகளை நியமிப்பது தொடர்பாகவும் மருத்துவமனையை கூடிய விரைவில் நவீனமயப்படுத்துவதும் ஆலோசிக்கப்பட்டிருக்கின்றது.

இக் கூட்டத்தில் கலந்து கொண்ட மூதூர் முஸ்லிம் பிரமுகர் ஹரீன் மௌலவி அவர்கள் இக் கூட்டம் தொடர்பாக தமிழோசையிடம் கூறும் போது;

இந்தக் கூட்டத்தில் மருத்துவமனைக்கு மேலதிகமாக மருத்துவர்கள்,தாதியர்கள் நியமிக்கப்படுவது தொடர்பாக பல்வேறு உறுதிமொழிகள் கொடுக்கப்பட்டதாகவும் இருந்தாலும் பல்வேறு வாதப்பிரதிவாதங்களுக்கு சரியான பதில் கிடைக்கவில்லை எனவும் கூறினார். (ச-5)

# நெடுங்கேணி நோக்கி எறிகணைத் தாக்குதல்

(கிளிநொச்சி)

மணலாறுப் பகுதியிலிருந்து நேற்று நெடுங்கேணியில் ஊஞ்சல்கட்டி, மருதோடைப் பகுதிகளை நோக்கிப் படையினர் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

தொடர் எறிகணைத் தாக்குதல்களை அடுத்து அச்சம் காரணமாக அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இதேவேளை புளியங்குளம் சேமமலைப் பகுதிகளிலிருந்தும் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச)

# சிற்றூர்திச் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.– கொழும்புத்துறை சேவையில் ஈடுபடும் சிற்றூர்திச் சேவை நாளை முதல் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறும் என யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. (ச)


## சிறு விளம்பரம்

### கார் விற்பனைக்கு

டாக்டர் ஒருவரின் தனிப்பட்ட பாவனையிலுள்ள புத்தம் புதிய Maruti Zuziki-Wagan-R கார் விற்பனைக்குண்டு. தொடர்பு 'இராஜஸ்தான்' சிவராஜா அவென்யூ, தபால் பெட்டிச் சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி. (Music World முன்பாக) (617)

அற்பமாய் எதிர்பார்க்கவும் அதிகமாய் அனுபவிக்கவும் கற்றுக் கொள்வதே வெற்றியின் இரகசியம்.

–கெதே

வலம்புரி

## ஜே.வி.பியுடன் ஐக்கிய தேசியக் கட்சி கூட்டுச் சேரும் வாய்ப்புண்டா?

எதுவெல்லாம் நடக்கக் கூடாது என நினைக்கின்றோமோ அதுவெல்லாம் அரசியலில் நடந்து விடுகின்றது. இரண்டு பிரதமர்களின் மகனாக இருக்கக் கூடிய அநுரா பண்டாரநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டமையும் தமிழகத்தில் வை.கோபாலசாமி ஜெயலலிதாவுடன் கூட்டு வைத்துக் கொண்டமையும் அரசியல் ஆரூடங்களுக்கு அப்பாற்பட்டவை.

இவை இரண்டிலுமிருந்து அரசியல்வாதிகள் எப்படியும் நடந்து கொள்வார்கள் என்ற முடிபுக்கு நாம் வருவதில் தடைகள் இருக்க முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தம் பக்கம் இழுத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அதிரடியாக மூன்று அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்துள்ளார்.

இந்நிலையில் அநுரா பண்டார நாயக்கா, மங்கள சமரவீர ஆகிய இருவரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நீண்ட கால உறுப்பினர்கள். அதிலும் அநுரா பண்டாரநாயக்காவைப் பொறுத்தவரை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வாரிசு என்று கூடக் கூறிக்கொள்ளலாம்.

பண்டார நாயக்கா குடும்பத்தின் கடைசி வாரிசு நானே என்று அநுரா பண்டார நாயக்கா ஒருதடவை கூறியுள்ளார். எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டார நாயக்காவின் ஏக புதல்வனாகிய அநுரா, ஓர் பிரமச்சாரி என்பதால் அவரின் 'இறுதி வாரிசு' என்ற சொற்பதம் அரசியல் லாபம் கருதியதல்ல என்பது இங்கு சுட்டிக்காட்டுவதற்குரியது.

எனினும் ஒரு கட்சியின் ஆரம்ப கர்த்தாவின் மகனை அமைச்சுப் பதவியிலிருந்து தூக்கி எறிந்தமையை ஒரு சாதாரண நிகழ்வாக கருதி விட முடியாது.

அதேநேரம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து முன்னாள் ஜனாதிபதியும் அநுரா பண்டாரநாயக்காவின் சகோதரியுமான சந்திரிகா குமாரதுங்க ஓரங்கட்டப்பட்டுள்ளார்.

இவற்றை நோக்கும் போது குறித்த அரசியல் கட்சியில் பண்டார நாயக்காவின் குடும்ப ஆதிக்கம் செல்வாக்குச் செலுத்துவதை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விரும்பவில்லை என்ற முடிபுக்கு நாம் வரலாம்.

இவற்றின் மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை தமது பக்கம் இழுத்தமை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பண்டாரநாயக்க குடும்பத்தைத் தூக்கி எறிந்தமை உட்பட ஜே.வி.பியை ஓரங்கட்டியமை வரையிலான மூன்று முக்கிய கருமங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒரே நேரத்தில் கனகச்சிதமாக செய்து முடித்துள்ளார்.

இங்குதான் அரசியல் இராஜதந்திரிகளின் தீர்ப்புக்கள் தேவைப்படுகின்றன. அதாவது ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பண்டார நாயக்க குடும்பம், ஜே.வி.பி. என்பவற்றில் அதிரடியாக 'அரசியல் தாக்குதல்' நடத்திய ஜனாதிபதி மகிந்தவுக்கும் தாக்கப்பட்டவர்களின் 'அரசியல் தாக்குதல்' எப்படி அமையப் போகின்றது என்ற முடிபுகளை மக்கள் அரசியல் ராஜதந்திரிகளிடம் இருந்து அறிய விரும்புகின்றனர்.

பாதிக்கப்பட்ட சந்திரிகா குமாரதுங்க, அநுர பண்டாரநாயக்க, மங்கள சமரவீர ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து ஜனாதிபதிக்கு எதிராக போர்க் கொடி தூக்கலாம்.

இதற்கு ஜே.வி.பியின் ஆதரவு தேவையானதாகும். இங்குதான் இடியப்பச் சிக்கல் ஏற்படுகின்றது. அதாவது மகிந்தவுடன் ஜே.வி.பி. கூட்டுச் சேர்ந்தமையினாலேயே ஜனாதிபதியாகும் சந்தர்ப்பம் தனக்கு இல்லாமல் போனதாக இதுவரை நினைத்துக் கொண்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்க, ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர முன்வருவாரா? என்பதே அந்தச் சிக்கலாகும்.

பழையவற்றை மனதில் சுமந்து கொண்டால் புதிய சுமையை எதிர்கொள்ள முடியாதென்ற புதிய தத்துவத்தை ரணில் பிரயோகித்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகளை வரையறை செய்ய விதிமுறைகள் அறிமுகம்

இலங்கையில் செயற்பட்டு வரும் வெளிநாட்டு மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை வரையறை செய்யும் விதிமுறைகளை அரசு அறிமுகப்படுத்தவுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று எந்தவிதமான எல்லைக்குள் தமது மனிதாபிமானப் பணிகளை ஆற்றலாம் என அறிவுறுத்தும் விதிமுறைகளையே வெகு விரைவில் அமுல்படுத்தவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அரச சார்பற்ற நிறுவனங்களைப் புலிகளுடன் தொடர்புபடுத்தி அண்மைக்காலங்களாக வெளிவந்து கொண்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்தும் நோக்கில் கொழும்பு ஜெக் ஹில்டன் ஹோட்டலில் வெளிநாட்டுத் தூதுவர்கள் இணைந்து நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டதாவது;

அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கையில் ஆற்றிவரும் பணிகளை நாம் மெச்சுகின்றோம். ஆனால் அதே வேளை இலங்கை அரசாங்கம் ஒரு சுதந்திர இறைமையுள்ள ராஜ்ஜியம் என்பதையும் எவரும் மறக்கக் கூடாது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது அண்மைக்காலமாக எழும் சில குற்றச்சாட்டுக்கள் குறித்து நாம் வெறுமனே வாளாதிருக்கவும் முடியாது. புலிகளின் முகாம்களில் சில அரச சார்பற்ற நிறுவனங்களின் உபகரணங்கள் கண்டு பிடிக்கப்பட்டதையும் நாம் பார்த்துள்ளோம்.

இவை தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இதன்படி நாம் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகளை வரையறை செய்து விதிமுறைகள் வகுக்கவுள்ளோம்.

மேலும் எமது நாட்டிற்கென்று சில சட்ட திட்டங்கள் உள்ளன. இவற்றை மீறுபவர்கள் மீது விசாரணை நடத்த எமக்கு உரிமையுண்டு. இதன் பிரகாரம் இவ்வாறான விசாரணைகள் ஏதாவது ஒரு அரச சார்பற்ற அமைப்பு மீது நடைபெறுமேயானால் அந்த விசாரணை முடியும் வரை பகிரங்க அறிக்கைகள் எதனையும் இவ்வமைப்புகளுக்கு எதிராக வெளியிடுவதில்லை என்றும் நாம் முடிபெடுத்துள்ளோம்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசசார்பற்ற அமைப்புக்களுக்கு எதிரானவர் என்னும் ஒரு எண்ணத்தை சர்வதேசத்தில் உருவாக்க சிலர் முயல்கின்றனர். ஆனால் ஜனாதிபதியும் எமது அரசாங்கமும் அவ்வாறல்ல. நாம் இவ்வமைப்புக்களுக்கு தொடர்ந்தும் எமது ஆதரவுகளை அளிக்க முன்வந்திருக்கின்றோம் என்றார். (ச)

## தேரர்களை விகாரையில் மட்டும் இருக்குமாறு கூறுவதற்கு மகேஸ்வரனுக்கு அருகதையில்லை

### எல்லாவல மேதானந்த தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

தேரர்கள் விகாரையில் மட்டுமே இருக்க வேண்டும் என்று கூறுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பிக்கு எந்தவிதமான அருகதையுமில்லை. வேண்டுமானால் பூசாரிமார்களை கோவிலில் மட்டுமே இருக்குமாறு கூறலாம் என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் எம்.பி. நடராஜா ரவிராஜின் படுகொலை தொடர்பான அனுதாபப் பிரேரணையில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது;

பிரபாகரனை நாங்கள் எதிர்க்கவில்லை. மாறாக பிரபாகரனின் பயங்கரவாதத்தையே நாங்கள்எதிர்க்கின்றோம். இந்த நாட்டில் அனைத்து மக்களுக்கும் வாழும் உரிமை உண்டு. இதனை நாம் மதிக்க வேண்டும்.

ஜாதிக ஹெலஉறுமய இனவாதக் கட்சி என்று விமர்சிக்கப்படுகின்றது. ஆனால் நாங்கள் அனைத்து இனங்களினதும் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வருகின்றோம். தேரர்கள் விகாரையில் இருக்க வேண்டும் என்று மகேஸ்வரன் எம்.பி. அண்மையில் தெரிவித்துள்ளார்.

தேரர்கள் விகாரையில் இருக்க வேண்டும் என்று கூறுவதற்கு மகேஸ்வரனுக்கு எந்த அருகதையுமில்லை. பூசாரிமார்களை கோவிலில் இருக்குமாறு மகேஸ்வரன் கேட்கலாம். ஆனால் தேரர்களை விகாரையில் இருக்குமாறு கோர அவருக்கு என்ன அருகதையுள்ளது.

ஜே.வி.பியின் விமல் வீரவன்ச எம்.பி. எங்களை விமர்சித்துள்ளார். விமர்சனங்களைக் கண்டு நாங்கள் தடுமாறப் போவதில்லை.

நாங்கள் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்திற்கு முழுமையான ஆதரவினை வழங்கி வருகின்றோம். எனவே விமல் வீரவன்சவையும் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குமாறு கேட்கின்றோம் என்றார். (எ-5)

## தமிழ் மக்களின் நியாயங்களை தென்பகுதிக்கு எடுத்துக் கூறியதுதான் ரவிராஜ் செய்த தவறா?

### அமைச்சர் திஸ்ஸ விதாரண சபையில் கேள்வி

நாங்கள் வெவ்வேறாகப் பிரிந்து சென்றாலும் இந்த நாட்டின் பிரச்சினைத் தீரப் போவதில்லை. முக்கியமாக நீர் பங்கீட்டுப் பிரச்சினை எழும். எனவே அனைவரும் ஒன்றுபட்டால் மட்டுமே அமைதியை ஏற்படுத்த முடியும் என்று விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் திஸ்ஸ விதாரண நேற்று சபையில் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற படுகொலை செய்யப்பட்ட எம்.பி.நடராஜா ரவிராஜ் மீதான அனுதாபப் பிரேரணையில் கலந்து கொண்டு பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது;

ரவிராஜின் இழப்பு ஈடுசெய்ய முடியாது. ரவிராஜ் இந்த நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தார் என்று சிங்கள அரசியல்வாதிகள் கூறுகின்றமை நகைச் சுவையாகவுள்ளது.

தமிழர் தரப்பு நியாயங்களை சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு சென்றமைதான் ரவிராஜ் செய்த தவறா? ஆளும் கட்சியின் அடிவருடிகளே இந்தக் கொலையைச் செய்துள்ளனர். காலம் இதற்கு விரைவில் பதில் சொல்லும்.

ஸ்கொட்லன் யார்ட் பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்கின்றனர் என்று கூறி உலகை ஏமாற்ற அரசாங்கம் முயற்சிக்கின்றது. நடராஜா ரவிராஜ் ஒரு சிறந்த பேச்சாளர். மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர். கொள்கைகள் தொடர்பாக அவருடன் எங்களுக்கு முரண்பாடுகள் இருந்தாலும் அவரின் கருத்துச் சுதந்திரத்தை மதிக்கின்றோம்.

உலகில் ஆயுதங்களை விற்பனை செய்யும் சில அமைப்புக்கள் நாடுகளின் சில பிரச்சினைகளை பெரிதுபடுத்தி வருகின்றன. பிரச்சினைகளை விஸ்வரூபம் எடுக்கச் செய்கின்றன.

பின்னர் ஆயுதங்களைக் குறிப்பிட்ட அமைப்புக்கள் விற்பனை செய்கின்றன. எமது பிரச்சினைகளை பூதாகரமாக்கி விட்டு அதில் குளிர்காய்கின்றன. ரவிராஜ் படுகொலை செய்யப்படுவதற்கு முன்பதாக ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டார்.

மூன்றாவது சக்தி ஒன்றே இந்தக் கொலையைச் செய்துள்ளமை தெளிவாகின்றது. இந்த மூன்றாவது சக்திக்கு இரையாகாமல் இருக்க நாம் ஒன்றுபட வேண்டும்.

அனைத்துப் பிரஜைகளினதும் மனித உரிமைகளை நாம் மதிக்க வேண்டும். தமக்கு உரிய முறையில் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதில்லை என்று தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் கருதுகின்றனர்.

இந்த நிலைமை மாற வேண்டும். சிறுபான்மையின மக்கள் தமது அரசியல் பிரதிநிதிகள் ஊடாகக் கோரிக்கைகளை முன்வைக்கின்றனர்.

அம் மக்களுக்குப் போதுமான அளவு அரசியல் அதிகாரம் பகிரப்பட வேண்டும்.நாம் யதார்த்தத்தை உணர வேண்டும். ரவிராஜின் போராட்டத்தை மதிப்போம். பிரச்சினையைத் தீர்க்க ஒன்றுபடுவோம். (எ-1)

## சமையல் எண்ணெய் விலையை குறைக்க ஜனாதிபதி பணிப்பு

சமையல் எண்ணெய் விலையை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

சமையல் எண்ணெய்க்கான இறக்குமதித் தீர்வை 70சத வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் பண்டிகைக் காலங்களில் அதிகளவான எண்ணெயைப் பயன்படுத்தும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் புறக்கோட்டை எண்ணெய் வர்த்தகர்கள் சார்பாக ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது.

விலை அதிகரிப்புக் காரணமாக மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதாகவும் சமையல் எண்ணெய் விற்பனைசெய்யும் வர்த்தகர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனைக் கருத்திற்கொண்டு சமையல் எண்ணெயின் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு புறக் கோட்டை எண்ணெய் வர்த்தகர்கள் ஜனாதிபதியைச் கோரியிருந்தனர்.(ச)

# மனித உரிமைகள் மீறப்படுவதை ஒரு போதும் அரசு அனுமதிக்காது

## வெளியுறவு அமைச்சர் ரோஹித

(கொழும்பு)

இலங்கையிலுள்ள பயங்கரவாத செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து சமாதானத்தை ஏற்படுத்துவதில்தான் நாட்டின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது.

நாட்டை அபிவிருத்தி பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டுமாயின் முதலில் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படல் வேண்டும் என்று வெளிநாட்டமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்தார்.

பயங்கரவாதம் இருக்கின்ற வரையிலும் ஜனநாயகம் கேள்விக்குள்ளாக்கப்படுகின்றது. இதனால் இலங்கையில் மனித உரிமைக்கான விழுமியங்கள் மோசமாகி வருகின்றது.

வெளிநாட்டு அமைச்சர் என்ற வகையில் எனது பணி மிகவும் முக்கியமானது. பயங்கரவாதத்தை தலைதூக்கவிட்டு மக்கள் கொலை செய்யப்படுவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது.


மனித உரிமைகள் மீறப்படுவதை ஒரு போதும் அரசு அனுமதிக்காது. உரிமைகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆதரிக்கின்றார் எனினும் இலங்கையில் மனித உரிமைகளுக்கான விழுமியங்கள் மிகவும் மோசமாகி வருகின்றன.

பயங்கரவாதத்தை அழித்தொழித்து சமாதானத்தை ஏற்படுத்துவதினால்தான் இலங்கையை மீட்க முடியும் அதன் பின்னர் நாட்டை மீளமைக்க முடியும்.

பயங்கரவாதத்தை அழித்து ஜனநாயகத்தை சகல பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படல் வேண்டும் என்றார். (சு)

# மனித உரிமை மீறல் குறித்து சுட்டிக்காட்டும் அமைப்புக்கள் புலிகள் சார்பானவை அல்ல

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் பாரியளவில் மனித உரிமை மீறல்கள் இடம் பெற்று வருவதாக மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்த அமைப்புக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சார்பானது என்று கூறிவிட முடியாது என எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

மனித உரிமை மீறல் குறித்து ஆராய பாராளுமன்ற நிலையியற்குழு ஒன்றையே நியமிக்க அரசாங்கம் முன்வரவேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்க சபையில் வேண்டுகோள் விடுத்தார்.

நாட்டில் சட்டம் ஒழுங்கு நடைமுறையில் உள்ளதா என்று கேள்வி எழுப்பிய ரணில் விக்கிரமசிங்க; அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், தொழிற்சங்க வாதிகள், ஊடகத்துறையைச் சேர்ந்தவர் என பலதரப்பட்டவர்களும் அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர் என்றும் சொன்னார்.

இனப்பிரச்சினைக்கு தமிழர்கள் மட்டும் தனித்து நின்று தீர்வுகாண முடியாது எனவும் அதில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களின் பங்களிப்பு தேவை என்பதையும் தெளிவுபடுத்தினார். அத்துடன் அவை அவசியம் என்றும் கூறினார்.

நாட்டின் சட்டதிட்டங்கள் மற்றும் அடிப்படை மனித உரிமை மீறல்கள் பற்றியும் பேசினார். வடக்கு கிழக்கு மட்டுமன்றி அதற்கு அப்பால் சென்றும் பேசினார்.

பாதுகாப்புப் படையினர் மற்றும் ஏனைய சிலகுழுக்களினால் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு பகிரங்கமாக பேசுவதற்கு அவர் மீது துரோகிப்பட்டம் சுமத்தப்பட்டது.

அமைச்சர்கள் கூட இன்று வீதியில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்பதுடன் தொழிற்சங்க வாதி ஒருவர் கடத்தப்பட்டுள்ளார் என்பது குறித்து பாராளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவந்ததை யடுத்து அவர்கள் புலிகளுடன் தொடர்புடை யவர்கள் என்று கூறி ஒலி, ஒளி நாடா மூலம் அவர்களின் வாக்கு மூலங்களையும் ஊடகங்கள் மூலம் பிரசாரப்படுத்தியுள்ளனர்.

இதற்குப் பின்னர் அவர்களை நீதி மன்றத்திற்கு கொண்டு செல்ல முடியும். அவர்கள் கடத்தப்படவில்லை கைதுசெய்யப்பட்டுள்ளனர். புலிகளுடன் தொடர்புடையவர் என்றும் கூறுகின்றனர்.

நாட்டில் சட்டம் இருக்கிறதா என்ற கேள்வி எழும்புகின்றது. ஏனென்றால் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், தொழிற்சங்கவாதிகள் ஏன் ஊடகவியலாளர்கள் கூட அச்சத்துடனேயே இருக்கின்றனர் என்றார். (சு)

# கிழக்கில் தொண்டர் அமைப்புகள் பணிகளை இடை நிறுத்தும் நிலை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் சர்வதேச அமைப்புக்கள் தமது பணிகளை இடை நிறுத்தும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜேர்மனியை தளமாகக் கொண்டுள்ள ஜீ.ரி.சற். என்னும் தொண்டர் அமைப்பு மட்டக்களப்பில் உள்ள தனது இரண்டு அலுவலகங்களை மூடியுள்ளது.

இந்த அலுவலகங்களுக்கு ஆயுதங்களுடன் சென்ற துணை ஆயுதக்குழுவினர் அங்கு கடமையில் இருந்த பணியாளர்களை அச்சுறுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று ஏனைய வெளிநாட்டு தொண்டர் அமைப்புகளும் கிழக்கு மாகாணத்தில் தமது பணிகளை இடைநிறுத்த தீர்மானித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வாரம் 16 சிறுவர்களும் ஏழு இளைஞர்களும் ஆயுதக்குழுக்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது. (சு)

# ஜே.வி.பி.குழு இன்று கூடுகிறது

(கொழும்பு)

ஜே.வி.பியின் பாராளுமன்றக் குழு இன்று அவசரமாகக் கூடுகின்றது. நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மோதல் காரணமாக தமது கட்சி நிலைப்பாட்டை தெரிந்து கொள்வதற்காக அவ் அவசர கூட்டம் கூடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக்கட்சி சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆகிய வற்றுக்கிடையில் தற்பொழுது கட்சித் தாவல் இடம் பெற்று வரும் வேளை ஜே.வி.பி.முக்கிய ஒரு கட்சியாக திகழ்கிறது.

இந் நிலையில் அவர்களின் இன்றைய கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைவதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (சு)

## அமைச்சுப் பதவிகள் ...

அரசாங்கத்தின் முக்கிய மூன்று அமைச்சர்களின் அமைச்சுக்களை ஜனாதிபதி தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தமை சரியானது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயற்குழுக்கூட்டம் அலரிமாளிகையில் நேற்று மாலை இடம் பெற்றுள்ளது.

சுமாராக ஒன்றரை மணித்தியாலம் இடம் பெற்ற இக் கூட்டத்தில் ஜனாதிபதி தனது நிலைப்பாடு குறித்து கட்சியின் செயற்குழு உறுப்பினர்களிடையே விளக்கியுள்ளார்.

முன்னைய அமைச்சர்கள் மங்கள சமரவீர மற்றும் சிறிபதி சூரியாராட்சி ஆகியோர் தேர்தலில் தனக்கு பெரும் உதவி புரிந்துள்ளனர் என தெரிவித்த ஜனாதிபதி அதற்காக அரசாங்கத்தையும், கட்சியையும் பலவீனமடைய செய்ய முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் இவர்களின் அண்மைக் கால நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டே பல முறை சிந்தித்து இந்த நடவடிக்கை எடுத்ததாக ஜனாதிபதி நேற்றைய கூட்டத்தில் தெரிவித்தார்.

இந்த வகையில் அமைச்சர்களான அநுரா பண்டாரநாயக்க, மங்கள சமரவீர மற்றும் சிறிபதி சூரியாராட்சி ஆகியோரின் அமைச்சுக்கள் பறிக்கப்பட்டதை செயற்குழுவால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை முக்கிய மூன்று அமைச்சர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டதையடுத்து விரைவில் பொதுத்தேர்தல் நடைபெறலாம் என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

அமைச்சுப் பதவிகள் ஜனாதிபதி மீளப் பெறப்படுவது சாதாரணமான விடயமாக இருந்த போதிலும் அநுரா மற்றும் மங்கள சமவீர ஆகியோரின் பதவிகள் பறிக்கப்பட்டமை அரசியலிலேயே பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

அவற்றை நிறைவு செய்ய பொதுத்தேர்தல் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. (சு-3)

## பாதுகாப்பு அமைச்சின்...

தாக்குதல்கள் மோசமான விளைவுகளை ஏற்படுத்துமென எச்சரித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகருடன் விமானப்படைத் தளபதி றொசான் குணதிலகவும் இந்தியா சென்றுள்ளார். இவர்கள் இருவரும் இந்தியாவில் நடைபெறும் ஏய்ரோ இந்தியக் கண்காட்சியில் கலந்து கொள்ளவே இந்தியா சென்றுள்ளதாக அரச தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

விடுதலைப்புலிகளின் தளங்களை வடக்கிலும் கிழக்கிலும் கைப்பற்றும் பாரிய படை நடவடிக்கை ஒன்றினை ஆரம்பிக்கவுள்ளதாக வெளியான தகவல்களை அடுத்தே பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை இந்தியா அழைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-5)

## சர்வகட்சிக்குழுக் கூட்டம்...

முன்வைத்த யோசனைகளிற்கு அரசியல் கட்சிகளின் கருத்துக்கள் கிடைத் திருப்பதாக சர்வகட்சி பிரதிநிதிகள் தலைவரும் அமைச்சருமான திஸ்ஸ விதாரண தெரி வித்துள்ளார்.

அரசியல் கட்சிகளின் கருத்துக்களினை கருத்தில் கொண்டு தான் முன்வைத்த யோசனைகளின் திருத்தங்களைச் செய்து அதனை மீண்டும் அந்த கட்சிகளுக்கு முன்வைக்கப் படவுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

அடுத்த வாரம் நடைபெறவுள்ள பிரதிநிதிகள் குழுக்கூட்டத்தில் அரசியல் தீர்வு யோசனை சம்பந்தமாக பகிரங்க விவாதங்கள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை சர்வகட்சி பிரதிநிதிக்குழுக் கூட்டத்தில் தாம் கலந்து கொள்ளப்போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (சு-3)

## ஏழு தமிழர்கள்...

இருந்து உறவினர் வீடுகளிலும் விடுதிகளிலும் தங்கியிருந்தவர்களே கைது செய்யப்பட்டவர்களாவர்.

ஒருவர் மாத்திரமே உடப்பூர் செல்வபுரம் பகுதியைச் சேர்ந்தவராவார். (சு)

## மூன்று...

அதிகாரங்களைப் பயன்படுத்தியே ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ளார்.

அமைச்சர் மங்கள சமரவீரவிடம் இருந்த துறை முகங் கள் மற்றும் விமானப்போக்குவரத்து அமைச்சு, அநுரா பண்டாரநாயக்கவிடம் இருந்த தேசிய மரபுரிமைகள் அமைச்சு, சிறிபதி சூரியாராட்சியிடம் இருந்த துறைமுகங்கள் அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றையே ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலில் ஜனாதிபதி கையொப்பமிட்டுள்ளார். (சு)

## மங்கள...

அமைச்சர் மங்கள சமரவீர நாட்டில் இல்லாதவேளை அவருடைய அமைச்சுப் பதவியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பறித்துள்ளமை அரசியலில் பெரும் அதிர்வினை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் இரு ஜனாதிபதிகளை உருவாக்கியவர் என வர்ணிக்கப்படும் மங்கள சமரவீர மீது மகிந்த ராஜபக்ஷ எடுத்துள்ள நடவடிக்கை மிகப்பெரும் பின்விளைவை ஏற்படுத்துமென அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இங்கிலாந்திலிருந்து சந்திரிகா குமாரதுங்கவும் மங்கள சமரவீரவும் இந்தியா செல்லவுள்ளதாக தெரியவருகிறது.

தமது அடுத்த கட்ட அரசியல் நகர்வுகள் குறித்து இந்தியத் தரப்பிற்கு அவர்கள் தெளிவுபடுத்தவுள்ளனர். (ச-5)

## அரசியல்...

செலவீனங்கள் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைத்தல் மற்றும் வெளிநாட்டு உதவிகள் குறைதல் போன்ற மறைமுகப் பாதகங்களும் ஏற்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமாதானத்தை ஏற்படுத்த இரு தரப்பும் முயற்சித்தால் மட்டுமே உதவி வழங்கும் நாடுகளும் தமது உதவிகளை வழங்க முன்வருவார்கள் என்றும் அவர் கூறினார். (ச-3)

## இலங்கையர்களுடன்...

அவர்கள் கூறியிருக்கின்றார்கள். எவ்வாறாயினும் இந்தக் கப்பலில் இலங்கையர்கள் பயணம் செய்து கொண்டி ருந்தார்கள் என்பது தொடர்பாக இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவிக்கிறது. (ச-3)

## ஐக்கிய நாடுகள்...

கருணா படையினர் சிறுவர்களை படையில் சேர்ப்பது தொடர்பாக அரசு விசாரணை நடத்தும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கருணா படையினர் சிறுவர்களை சேர்ப்பதற்கு அரச படையினர் ஒத்துழைப்பு வழங்கும் கருத்து ஆதரமற்ற வதந்தி என்று காரியவசம் தெரிவித்துள்ளார். (எ)

## வவுனியாவில்...

சுட்டுக்கொன்று விட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும், இவர் பூந்தோட்ட அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரி யராக கடமையாற்றி உள்ளார் எனவும் வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-3)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.02.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.